تاميلي

தமிழ்

# مفاتيح الغيب

# மறைவான அறிவின் திறவுகோல்கள்


ஆசிரியர்:

கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்

முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர் ,

மஃஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.



www.alsarhaan.com

WWW.MAHADSUNNAH.COM

بِسۡمِ ٱللَّهِ ٱلرَّحۡمَٰنِ ٱلرَّحِيمِ

# மறைவான அறிவின் திறவுகோல்கள்

அல்லாஹ் தனக்கென்று சொந்தமாக்கிக்கொண்ட விடயங்களில் மறைவான அறிவும் ஒன்றாகும்.

மறைவானவை பற்றிய அறிவு அது இறந்த காலமோ, நிகழ்காலமோ, எதிர்காலமோ எதுவாக இருந்தாலும் அதைப் பற்றிய அறிவு அல்லாஹ்வுக்கு மாத்திரமே சொந்தமானது.

சிலபோது அல்லாஹ் தனது அடியார்களில் சிலர்களுக்கு அவற்றில் தான் விரும்பும் சிலதை அறியச்செய்கிறான்.

நபி (ஸல்) அவர்களுக்கு அல்லாஹு தஆலா முன்னைய நபிமார்களின் சரித்திரங்களை கற்றுக் கொடுத்தான்.

அதேபோன்று, மறுமை நாளின் அடையாளங்களையும், எதிர்காலத்தில் நடைபெறும் பெரிய பெரிய சம்பவங்களையும் அல்லாஹ் அறியச்செய்தான்.

அல்லாஹ் தன்னைப் பற்றி திருமறையில் குறிப்பிடும் போது:

﴿عَٰلِمُ ٱلۡغَيۡبِ فَلَا يُظۡهِرُ عَلَىٰ غَيۡبِهِۦٓ أَحَدًا ٢٦ إِلَّا مَنِ ٱرۡتَضَىٰ مِن رَّسُولٖ فَإِنَّهُۥ يَسۡلُكُ مِنۢ بَيۡنِ يَدَيۡهِ وَمِنۡ
خَلۡفِهِۦ رَصَدٗا ٢٧ لِّيَعۡلَمَ أَن قَدۡ أَبۡلَغُواْ رِسَٰلَٰتِ رَبِّهِمۡ وَأَحَاطَ بِمَا لَدَيۡهِمۡ وَأَحۡصَىٰ كُلَّ شَيۡءٍ عَدَدَۢا ٢٨﴾

அவன் மறைவான அறிவுகளை அறிகின்றவன், தான் மறைத்து வைத்திருப்பவற்றை எந்த ஒருவருக்கும் அவன் வெளிப்படுத்த மாட்டான். இருந்தும், தான் பொருந்திக் கொண்ட தூதரை தவிர.

அத்தூதருக்கு முன்னாலும் பின்னாலும் பாதுகாவலரை மலக்குகளிலிருந்து அவன் ஆக்கி விடுகிறான்.

இது அத்தூதர்கள் தங்கள் ரப்பின் தூதுச் செய்திகளை திடமாக எத்தி வைத்தார்கள் என்பதை தான் அறிவதற்காக அவர்களிடம் உள்ளவற்றை தன் அறிவால் சூழ்ந்துகொண்டவனாக, ஒவ்வொரு பொருளையும் எண்ணிக்கையால் பூரணமாக கணக்கிட்டும் வைத்துள்ளான். (72:28-26)

மறைவான அறிவு பற்றிப் பேசும்போது அங்கு பிரதான ஐந்து திறவுகோல்கள் காணப்படுகின்றன. அதைப்பற்றிய அறிவு அல்லாஹ்வுக்கு மாத்திரமே சொந்தமானது, படைப்பினங்களுக்கு அதைப் பற்றிய அறிவை அல்லாஹ் மறைத்து வைத்துள்ளான்.

ஐந்து திறவுகோல்கள்:

மறுமை நாள் எப்போது நிகழும் என்பதை அல்லாஹ்வைத் தவிர எந்த மனிதனும் அறிய மாட்டான்.

எங்கே மழை பெய்யும், அது எப்போது பெய்யும் என்பதை கூட மனிதர்கள் அறிய மாட்டார்கள். அது எந்த அளவில் பெய்யும்? அல்லது பெய்யுமா பெய்யாதா? என்பதைக் கூட அல்லாஹ்வைத் தவிர யாரும் அறிய மாட்டார்கள்.

அதேபோன்று, கர்ப்பப்பையில் வளரும் சிசுக்களைப் பற்றி தெளிவாகவும் விரிவாகவும் அல்லாஹ்வைத் தவிர யாரும் அறியமாட்டார்கள். ஏனெனில் சிசுக்களை அல்லாஹ்வே உருவாக்குகின்றான். அச்சிசுக்களின் ஆகாரம், ஆயுட்காலம், அவற்றின் செயற்பாடுகள், அவர்கள் வளர்ந்து நல்லவர்களாக இருப்பார்களா? அல்லது தீயவர்களாக இருப்பார்களா? என்பது பற்றிய பூரண அறிவு அல்லாஹ்வுக்கு மாத்திரமே சொந்தமானது.

அதேபோன்று, ஒவ்வொரு மனிதனும் நாளை நல்லதோ, தீயதோ எதை சம்பாதிப்பான் என்பதையும் அல்லாஹ்வே அறிவான்.

அதேபோன்று, அம்மனிதன் நாளை எவ்வளவு ரிஸ்கை சம்பாதிப்பான்? அது குறைவானதா நிறைவானதா? என்பதையும் அல்லாஹ் மாத்திரமே அறிவான்.

மேலும் மனிதனுக்கு எவ்விடத்தில் எவ்வயதில் மரணம் சம்பவிக்கும் என்பதை அல்லாஹ்வே அறிவான்.

நடக்கவிருக்கும் சில விடயங்களை வைத்தியர்கள், வானிலையை அவதானிகள் அறிவிப்பதெல்லாம் வெறும் எதிர்வு கூறல்கள் மாத்திரமே.

சிசுக்களைப் பற்றியும் காற்றின் வேகம் பற்றியும் மழை பொழிவதை பற்றியும் சூரிய, சந்திர கிரகணங்கள் பற்றியும் அவர்கள் கூறுவது யாவும் அவர்களுடைய கணிப்பை வைத்தேயாகும். அவை சரியாக இடம் பெறும் வாய்ப்புகளும் இருக்கின்றன, தவறாகவும் வாய்ப்புகள் இருக்கின்றன.

ஆனால், இவை பற்றிய அல்லாஹ்வுடைய அறிவை பொறுத்தவரையில் அது திட்டமான, உறுதியான, ஆழ்த அறிவாகும். நிகழும் சம்பவங்களுக்கு சற்றும் பிசகாததுமாகும். அதிலே கற்பனைக்கோ, அல்லது தவறுக்கோ இடமில்லை.

இது பற்றி அல்லாஹ் தனது திருமறை வசனத்தில் பின்வருமாறு கூறுகிறான்.

﴿إِنَّ ٱللَّهَ عِندَهُۥ عِلۡمُ ٱلسَّاعَةِ وَيُنَزِّلُ ٱلۡغَيۡثَ وَيَعۡلَمُ مَا فِي ٱلۡأَرۡحَامِۖ وَمَا تَدۡرِي نَفۡسٞ مَّاذَا تَكۡسِبُ غَدٗاۖ وَمَا
تَدۡرِي نَفۡسُۢ بِأَيِّ أَرۡضٖ تَمُوتُۚ إِنَّ ٱللَّهَ عَلِيمٌ خَبِيرُۢ ٣٤﴾ لقمان: ٣٤

நிச்சயமாக அல்லாஹ் அவனிடம் தான் மறுமை நாள் பற்றிய அறிவு இருக்கிறது. அவனே மழையையும் இறக்கி வைக்கின்றான். அவனே கர்ப்பங்களில் உள்ளவற்றையும் அறிகின்றான். எந்த ஆத்மாவும் நாளை அது எதை சம்பாதிக்கும் என அறியாது. மேலும் எந்த ஆத்மாவும் எந்த பூமியில் தனக்கு மரணம் சம்பவிக்கும் என்பதையும் அறியாது. நிச்சயமாக அல்லாஹ் மிகவும் நன்கறிபவன். மிகவும் நன்குணர்பவன். **(31:34)**